பாடம் - 9

# எமது நாடு



எமது நாடு இலங்கை.
இது கடலால் சூழப்பட்ட ஒரு தீவு.
இது அழகு நிறைந்த நாடு.



அழகான கடற்கரைகள், உயரமான மலைகள், வற்றாத நதிகள் நிறைந்த நாடு.

பசுமையான வயல் வெளிகள், அடர்ந்த காடுகள் நிறைந்த நாடு.

இங்கு தேயிலை, றப்பர், தென்னை முதலியன வளர்கின்றன. கறுவா, ஏலம், கராம்பு முதலியனவும் பயிரிடப்படுகின்றன.

மா, பலா, வாழை முதலிய பழ மரங்களும் வளர்கின்றன.



இங்கு விலை உயர்ந்த இரத்தினக் கற்களும் கிடைக்கின்றன.

இங்கு சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் எனப் பல இனத்தவர்கள் ஒற்றுமையாக வாழுகின்றனர்.



இவர்கள் பௌத்தம், இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய சமயங்களைப் பின்பற்றுகின்றனர்.



நாம் எல்லோரும் இலங்கை நாம் ஒருவருக்கு ஒருவர் உதவி வாழ்வோம்.

குறிப்பு:
- ★ வாசித்துக் காட்டுங்கள்.
- ★ மாணவரை உரத்து வாசிக்க செய்யுங்கள்.
- ★ அரும்பதங்களுக்குப் பொருள் கூறுங்கள்.
  (உ+ம்) சூழ-சுற்றி வர
- ★ வினாக்களை வினவுங்கள்.
- ★ கலந்துரையாடுங்கள்.